*1970 மார்ச் 14]*

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எப்போது அமுல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** இப்போது சர்வே நடந்து கொண்டிருக்கிறது. முடிந்த பிறகு அமுல் நடத்தப்படும்.

### வடலூரில் தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டம்

* 387 வினா—**திரு. சி. கோவிந்தராஜன் :** மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

தென் ஆர்க்காடு மாவட்டம், வடலூரிலுள்ள தொழிலாளர்களுக்கு சமூக இன்ஷ்யூரன்ஸ் ( ) திட்டம் கொண்டு வரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** ஆம்.

**திரு. சி. கோவிந்தராஜன் :** இந்தத் திட்டத்தை எப்போது ஆரம்பிக்க உத்தேசம்? தேதி ஏதாவது குறிப்பிடப்படுமா? இன்று வடலூரில் உள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டிருக்கிறது. தொழிற்பேட்டை ஒன்றும் ஆரம்பிக்க இருப்பதனால் உடனடியாக இந்தத் திட்டத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு உறுப்பினருக்கு இருக்கிற ஆர்வத்தைப்போலவே எங்களுக்கும் இந்த வடலூர்ப் பகுதியில் உடனடியாக ஆரம்பிக்க வேண்டுமென்ற ஆர்வம் இருக்கிறது. டெல்லியில் உள்ள இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷன்தான் இதற்குத் தடையாக இருக்கிறது. முதலில் இரண்டாயிரம் தொழிலாளர்களுக்கான மருத்துவ மனைத் திட்டம் ஒன்றை அனுப்பியிருந்தோம். இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷன் செலவைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்றும், ஒரு தொழிலாளிக்கு ஒரு ஆண்டுக்கு 48 ரூபாய் செலவுக்குமேல் இல்லாதிருக்கும்படியாகவும் திருத்தி அனுப்பச் சொல்லியிருந்தார்கள். அதை நாங்கள் ஒப்புக் கொள்வதற்கில்லை என்றும், எங்களுடைய திட்டத்திற்கு இசைவு தரும்படியாகவும் எழுதியிருக்கிறோம். இடையில் மருத்துவ மனையை வாடகைக் கட்டடத்தில் அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### மேட்டூரில் தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவ மனை

* 388 வினா—**திரு. எம். சுரேந்திரன் :** மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூரில் படுக்கைகள் கொண்ட இ.எஸ்.ஐ. மருத்துவ மனை ஒன்று கட்டுவதற்குத் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?